**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**சுய கற்றல் கையேடு - 2020**
**கர்நாடக சங்கீதம்**

**தரம் 7**

தவணை - 01.

## குறில் ஸ்வரம்

குறில் ஸ்வரம் ஒரு அட்சர காலம் கொண்டதாகும்.
உதாரணம் :- ஸ ரி க ம
"ஹரஸ்வ" ஸ்வரம் என்றும் அழைக்கப்படும்.

## நெடில் ஸ்வரம்

நெடில் ஸ்வரம் ஒன்றுக்கு மேற்பட்ட அட்சர காலத்தை கொண்டதாகும்.
உதாரணம் :- ஸா ரீ கா
"தீர்க்க" ஸ்வரம் என்றும் அழைக்கப்படும்.

## அட்சர காலம்

ஸ்வரங்களின் கால அளவைக் குறிப்பது அட்சர காலமாகும். உதாரணம் :-

| | | |
|---|---|---|
| ஸ | - | 1 அட்சர காலம் |
| ஸா | - | 2 அட்சர காலம் |
| ஸா , | - | 3 அட்சர காலம் |
| ஸா ; | - | 4 அட்சர காலம் |

## சங்கீதக் கலையின் ஆரம்பம்

சங்கீதம் ஒரு புனிதமான கலை.மனிதன் நாகரிகம் அடைய முன்னரே இசை ஒரு மொழியாக விளங்கியது. மொழி மூலம் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாத காலத்தில் மனிதன் தனது உணர்ச்சிகளை ஓசை மூலம் வெளிப்படுத்தினான்.
பறவைகள், விலங்குகளின் ஓசைகள் மனிதனுக்கு முன்னோடியாக அமைந்தன எனலாம். நாகரிகம் வளர வளரக் கலைகளும் வளர்ந்தன. வேத காலத்தில் இறைவனை வழிபட்ட சாமகானம் எமது சுத்த இசைக்கு ஆரம்பம் எனக் கொள்ளலாம். சாமகானத்தில் நிஸரி என்ற மூன்று ஸ்வரங்களும் இசைக்கப்பட்டன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே ஏழு ஸ்வரங்களும் பிறந்தன. ஆதிகாலத்தில் கீதம், வாத்தியம், நிருத்தியம் என்ற மூன்றும் சேர்ந்ததே சங்கீதம் எனக் கருதப்பட்டது. பின்னர் சங்கீதக் கலை விசேடமாக வளர்ச்சி அடைந்ததால் கீதம், வாத்தியம் இரண்டும் சேர்ந்தது சங்கீதம் எனப்பட்டது.

## தவணை- 02

## லயம்

தாளத்தின் வேகத்தை ஒரே சீராக கொண்டு செல்வது லயம் ஆகும். சுருதி மாதா லயம் பிதா எனும் கூற்றுக்கிணங்க லயம் தந்தையின் ஸ்தானத்தை வகிகக்கின்றது. லயம் முன்று வகைப்படும்.

1.விளம்பித லயம் - 1ம்காலம்

2.மத்திம லயம் - 2ம் காலம்

3.துரித லயம் - 3 ம் காலம்

## ஆவர்த்தனம்

ஒரு தாளத்தின் _அங்கங்கள்_யாவற்றையும் ஒரு முறை கிரமமாக_போட்டு முடித்தல் ஆவர்த்தனம் _எனப்படும். இது தாள வட்டம் எனவும் அழைக்கப்படும்.ஆவர்த்தன முடிவைக் காட்டும் குறியீடு // ஆகும்.

## தாது மாது

இசை உருப்படி ஒன்றின் ஸ்வரப் பகுதி " தாது" எனப்பபடும்.

இசை உருப்படி ஒன்றின் ஸாகித்தியப் பகுதி "மாது" எனப்படும்.

உதாரணம்: பாம கரீ காரி ஸஸஸ → தாது
பூ ம களின் புன்ன கை போல் → மாது

## ஸ்தாயி

ஸரிகமபதநி என்ற ஏழு ஸ்வரங்களும் நிற்கும் நிலை ஸ்தாயி எனப்படும். ஸ்தாயியை தமிழிசையில் நிலை என்றும், பண்டைக் காலத்தில் மண்டிலம் என்றும் அழைக்கப் பட்டது

ஸ்தாயி மூன்று வகைப்படும

1. மந்திர ஸ்தாயி :- ஸ்வரங்களின் கீழ் ஒரு புள்ளி இடப்பட்டிருக்கும்.
   உதாரணம்:- பதநிஸ
   . . .
2. மத்திய ஸ்தாயி :- ஸ்வரங்களின் கீழோ, மேலோ புள்ளிகள் இடப்பட்டிருக்கமாட்டது.
   உதாரணம்:- ஸரிகம
3. தாரஸ்தாயி :- ஸ்வரங்களின் மேல் ஒரு புள்ளி இடப்பட்டிருக்கும்.
   . . . .
   உதாரணம்:- ஸரிகம

# சமயச் சடங்குககளில் பயன்படுத்தப் படும் இசைக்கருவிகள்

## பூசாரி கைச்சிலம்பு

இது நீண்டு வளைந்த வட்ட வடிவமானது. ஓர் அங்குல குறுக்களவுள்ள பித்தளை அல்லது வெண்கல சுருளின் ஒரு சில உலோக குண்டுகள் போடப்பட்டு இயங்கும் தாளக் கருவியாகும். இது கிராமங்களில் மாரியம்மன் கோவில்களில் வழிபாட்டின்போது இசைக்கப்படும் ..

## பறை

இது அரச செய்திகளை அறிவிப்பதற்காகவே முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டது.இது முரசு எனவும் அழைக்கப்படும். இதுவும் தோற்கருவி வகையைச் சேர்ந்தது. சங்ககால ஐவகை நிலங்களும் அவற்றிற்குரிய பறைகளும் பின்வருமாறு.

1. குறிஞ்சி- வெறியாட்டுப்பறை
2. முல்லை-ஏறுகோட்பறை
3. மருதம்-_நெல்லரிப்பறை
4. நெய்தல் – நாவாய்ப்பறை
5. பாலை - நிரைகோட்பறை

**தவணை** 03.

## நிபந்தம்

தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் பாடல்கள் நிர்பந்தம் எனப்படும். .கீதம், வர்ணம், கீர்த்தனை, இராகமாலிகை, கிருதி , தில்லானா, தேவாரம், திருப்புகழ் போன்றன. நிபந்த வகையுள் அடங்கும்.

## அநிபந்தம்.

தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத பாடல்கள் அநிபந்தம் எனப்படும் .வெண்பா, ஸ்லோகம் , திருத்தாண்டகம், திருவாசகம் போன்ற பாடல்கள் அநிபந்த வகையில் அடங்கும் .

## திரியாங்கம்

தாளத்தின் முதல் மூன்று அங்கங்களும்" திரியாங்கம்" எனப்படும். அவையாவன

| இல | அங்கத்தின் பெயர் | அங்க அடையாளம் | எண்ணிக்கை | செய்கை |
|---|---|---|---|---|
| 1 | அனுத்ருதம் | U | ஒன்று | கையை ஒரு முறை தட்டுதல் |
| 2 | த்ருதம் | O | இரண்டு | கையை ஒரு முறை தட்டி வீசுதல் |
| 3 | லகு | I | 5 வகை (ஜாதிகளுக்கேற்ப மாறுபடும்) | கையைத் தட்டி விரல்களை எண்ணுதல் |

## ஆதி தாளம்

ஆதி தாளத்தின் அங்கங்கள் லகு துருத்தம், துருத்தம் என்பனவாகும் .இத்தாளத்தின் மொத்த அட்சரங்கள் 8. ஆகும்.

( |OO. 4+2+2= 8. )

ஆதி தாளத்தின் செய்முறை ஒரு தட்டும் மூன்று விரல்எண்ணிக்கையும் ஒரு தட்டும் வீச்சும் பின் ஒரு தட்டும் வீச்சுமாகும்.

## ரூபக தாளம்

ரூபக தாளத்தின் அங்கங்கள் துருதம் (O) லகு (|) என்பனவாகும்.இத்தாளத்தின் மொத்த அட்சரங்கள் 6. ஆகும்

( 2 + 4. = 6. ) இதன் செய்கை முறை ஒரு தட்டும் வீச்சும் தட்டும் 3. விரல் எண்ணிக்கையும் ஆகும்.

### ஏகதாளம்

ஏக தாளத்தின் அங்கம் லகு ஆகும்.( | ) இத்தாளத்தின் மொத்த அட்சரங்கள் 4 ஆகும்.

இதன் செய்கை முறை ஒரு தட்டும் மூன்று விரல் எண்ணிக்கைகளும் ஆகும்.

## சமயச்சடங்குகளில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்

### உடுக்கை

கிராமப்புற கோயில்களில் பெரும்பாலும் வாசிக்கப்படும் ஒரு தோல் கருவியாகும். விசேடமாக மாரியம்மன் கோயில்களில் இவ்வாத்தியம் இசைக்கப்படும்.இதை "இடை சுருங்கிப் பறை" என்றும்" துடி" என்றும் அழைக்கப்படும்.

### தவண்டை

மரத்தாலும் தோலாலும் செய்யப்பட்ட உடுக்கை உருவத்தில் உள்ள பெரிய தாளக் கருவியே தவண்டை ஆகும். இது வழக்கமாக மாரியம்மன் கோயில்களில் வாசிக்ப்படும் தவண்டை குச்சியால் அடித்து வாசிக்கப்படும்..

### தம்பட்டம்

இவ் வாத்தியத்தின் ஒரு பக்கம் தோலால் மூடப்பட்டிருக்கும். " டண் டண் டண்ணணக்கு என்று கேட்கும் படியாக இசைக்கப்படும் .தம்பட்டம் இரு குச்சிகளால் வாசிக்கப்படும்.இது திருவிழாக்களில் பயன்படுத்தப் படுகின்றது.

துயாரிப்பு:- திருமதி.சு.சிவகாந்தன்,
ஆசிரியர்,
கிளி/திருவையாறு ம.வி.

## செயன் முறை
## தரம் 7

| இல | பாடல் வரி | வகை | இராகம் | தாளம் | இயற்றியவர் |
|---|---|---|---|---|---|
| 1 | கல்வித் தெய்வம் | பக்திப் பாடல் | பிருந்தாவன சாரங்கா | சதுஸ்ர ஏகம் | ந.வீரமணி ஐயர் |
| 2 | ஸரிகம ஸரிஸரி | ஸ்வர வரிசைகள் | மாயாமாளவகௌளை | ஆதி | ஸ்ரீ புரந்தரதாசர் |
| 3 | ஔவைக் கிழவி | சிறுவர் பாடல் | சங்கராபரணம் | சதுஸ்ர ஏகம் | கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை |
| 4 | மூவரென இருவரென | தேவாரம் | கம்பீரநாட்டை | ரூபகம் | சுந்தரமூர்த்தி நாயனார் |
| 5 | தையும் பிறந்ததம்மா | நாட்டார் பாடல் | -------------- | ஏகம் (திஸ்ர நடை) | -------------- |
| 6 | சூரியன் வருவது | சிறுவர் பாடல் | சங்கராபரணம் | ஆதி | யோகர் சுவாமிகள் |
| 7 | குழந்தையாக மீண்டும் | சிறுவர் பாடல் | கிந்துஸ்தான் பெகாக் | ஏகம் (திஸ்ர நடை) | ந.வீரமணி ஐயர் |
| 8 | இல்லக விளக்கது | தேவாரம் | கேதாரகௌளை | ஆதி | திருநாவுக்கரச நாயனார் |
| 9 | வாணம் கறுக்க வேணும் | நாட்டார் பாடல் | -------------- | சதுஸ்ர ஏகம் | -------------- |
| 10 | ஸரிகம, ரிகமப, கம்பத | அலங்காரம் | மாயாமாளவகௌளை | சதுஸ்ர ஏகம் | ஸ்ரீ புரந்தரதாசர் |
| 11 | சேவற்கோழியுண்டு | சிறுவர் பாடல் | கல்யாணி | ரூபகம் | கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை |
| 12 | உலகெலாம் உணர்ந்து | பேரிய புராணம் | மத்தியமாவதி | -------------- | சேக்கிழார் |
| 13 | இறவாமல் பிறவாமல் | திருப்புகழ் | விரும்பிய இராகம் | ஆதி | அருணகிரிநாதர் |
| 14 | கோலாடுவோம் | கோலாட்டப் பாடல் | பீம்பிளாஸ் | ஆதி | -------------- |

- "மூவரென இருவரென" என்ற தேவாரத்தின்
  பண்:- நட்டபாடை
  தலம்:- திருக்கேதீஸ்வரம்

- "இல்லக விளக்கது" என்ற தேவாரத்தின்
  பண்:- காந்தார பஞ்சமம்
  தலம்:- திருப்பாதிரிப்புலியூர்

- "உலகெலாம் உணர்ந்து" என்ற தேவாரத்தின்
  பண்:- செந்துருத்தி